# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. **இந்தியாவின் அணுமின் உற்பத்தித் திட்டங்களுக்கு உதவும் வகையில், ஆஸ்திரேலியாவில் இருந்து யுரேனியம் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.**

i. இது தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆக்கபூர்வ அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம், ஆஸ்திரேலியாவில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அந்நாட்டின் பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி இடையே நடைபெற்ற உயர்நிலைப் பேச்சுவார்த்தைக்குப்பின் கையொப்பமிடப்பட்டது.

ii. கடல்சார் பாதுகாப்பு, அரிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் ஒப்பந்தங்களும் கையொப்பமாகின.

iii. இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தால் எழுந்துள்ள கவலைகளுக்கு மத்தியில் மேற்கண்ட ஒப்பந்தங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

iv. ஆஸ்திரேலிய பிரதமருடன் பேச்சுவார்த்தை:

- பிரதமர் மோடி மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி இடையே இருதரப்பு உயர்நிலைப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு நாட்டு குழுவினருடன் மட்டுமன்றி, தனிப்பட்ட முறையிலும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.
- அப்போது, வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, அணு மின் உற்பத்தி, அரிய கனிமங்கள், கல்வி, சட்டபூர்வ இடப்பெயர்வு, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசித்தனர். பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச விவகாரங்கள் குறிந்தும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

v. ஆக்கபூர்வ அணுசக்தி ஒப்பந்தம் :

- இந்தியாவின் அணுமின் உற்பத்தித் திட்டங்களுக்கு உதவும் வகையில், ஆஸ்திரேலியாவில் இருந்து வர்த்தக ரீதியிலான யுரேனியம் விநியோகத்துக்கு வழிவகுக்கும் முக்கிய ஆக்கபூர்வ அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் உள்பட பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

vi. சுதந்திரமான இந்திய-பசிபிக்:

- இந்திய-பசிபிக் பகுதி என்பது இரு பெருங்கடல்கள் சந்திக்கும் இடம் மட்டுமல்ல; அது, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற ஒருமித்த கருத்துடைய ஜனநாயகங்களின் பகிரப்பட்ட எதிர்பார்ப்புகளின் அடையாளமாகவும் விளங்குகிறது. சுதந்திரமான, ஸ்திரமான இந்திய-பசிபிக் பிராந்தியம் மிக முக்கியமானதாகும்.
- பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தியா-ஆஸ்திரேலியா பாதுகாப்பு புத்தாக்க வழித்தட திட்டத்தின் வாயிலாக பாதுகாப்புத் துறை புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களின் பிணைப்புக்குப் பணியாற்றவுள்ளோம்.
- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் பகிரப்பட்ட முயற்சிகளுக்கு இந்திய-ஆஸ்திரேலிய கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு செயல் திட்டம் புதிய உத்வேகம் அளிக்கும். கப்பல் கட்டுமானம், பழுதுபார்ப்பு, பராமரிப்புச் செயல்பாடுகளிலும் ஒன்றிணைந்து செயல்படவுள்ளோம் என்றார் பிரதமர் மோடி.

vii. ஆக்கபூர்வ பயன்பாட்டுக்காக யுரேனியம் ஏற்றுமதி:

- ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி கூறுகையில், 'இந்தியாவின் ஆக்கபூர்வ பயன்பாடுகளுக்கு யுரேனியம் ஏற்றுமதி செய்யப்படும். இது, இந்தியாவின் புதைபடிம எரிபொருள் சாராத மின் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு உதவும். மற்றொருபுறம், ஆஸ்திரேலியாவின் வளங்களுக்கு கூடுதல் சந்தை கிடைக்கப் பெறும் என்றார்.

viii. 18 ஒப்பந்தங்கள், முக்கிய முடிவுகள்

- இரு பிரதமர்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியா-ஆஸ்திரேலியா இடையே மொத்தம் 18 ஒப்பந்தங்கள் மற்றும் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆக்கபூர்வ அணுசக்தி, கடல்சார் பாதுகாப்பு, சுரங்க தொழில்நுட்பம் சார்ந்த திறன் மேம்பாடு, குருகிராமில் ஆஸ்திரேலியாவின் விக்டோரியா பல்கலைக்கழக வளாகம், பெங்களூரில் ஃபிளின்டர்ஸ் பல்கலைக்கழக வளாகம் அமைத்தல், புத்தாக்கம்- தொழில்நுட்பம், அறிவியல் - ஆராய்ச்சி தொடர்பான ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.
- பாதுகாப்புத் துறை ஒத்துழைப்புக்கான கூட்டுப் பிரகடனம், எரிசக்தித்

துறை உறவுகள் சார்ந்த கூட்டறிக்கை, இணையப் பாதுகாப்பு, முக்கியத் தொழில்நுட்பங்கள், விநியோகச் சங்கிலி துறையில் ஒத்துழைப்புக்கான செயல்திட்டம் ஆகியவையும் வெளியிடப்பட்டன. இருதரப்பு விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம், முதலீடு பாதுகாப்பு ஒப்பந்தப் பணிகளை விரைவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

ix. இந்தியாவுக்கு திரும்பும் தமிழக பழங்காலச் சிலைகள்!

- ஸ்திரேலியாவின் தேசிய கலைக்கூடம் மற்றும் நியூசௌத் வேல்ஸ் கலைக்கூடத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த தமிழகத்தைச் சேர்ந்த 3 பழங்காலச் சிலைகளை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைப்பதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.
- பிரதமர் மோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி இந்த அறிவிப்பை வெளியிட்டார். இதேபோல், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படும் ஆஸ்திரேலிய பூர்வகுடி மூதாதையர் ஒருவரின் உடலை அந்த நாட்டிடம் திருப்பி ஒப்படைக்கும் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் அவர் வரவேற்றார்.
- மேற்கண்ட அறிவிப்பின்படி, ஆஸ்திரேலியாவில் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த பழங்கால நந்தி கற்சிலை (11-12 ஆம் நூற்றாண்டு), திரிசூலத்துடன் கூடிய பத்ரகாளி வெண்கலச் சிலை (11-ஆம் நூற்றாண்டு), சண்முகர் கற்சிலை (12-ஆம் நூற்றாண்டு) ஆகியவை இந்தியாவுக்கு கொண்டு வரப்பட உள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2. **கமேனியின் உடல் அவரது சொந்த ஊரான மஷாத் நகரில் உள்ள ஷியா முஸ்லிம்களின் புனிதத் தலமான இமாம் ரெஸாவில் அடக்கம் செய்யப்பட்டது.**

3. **துருக்கி தலைநகர் அங்காராவில் நடைபெற்ற நேட்டோ உச்சிமாநாட்டில் பங்கேற்ற உறுப்புநாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் கைத்துப்பாக்கி ஒன்றை பரிசாக வழங்கியுள்ளார்.**

i. துருக்கியின் பாதுகாப்புத் தளவாட உற்பத்தியை உலக நாடுகளுக்கு பறைசாற்றும் வகையிலும், தனது வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகவும் பழமையான ரிவால்வர் ரக துப்பாக்கியுடன், உண்மையான

தோட்டாக் களையும் அவர் பரிசாக அளித்துள்ளார்.

ii. ஓர் ஆய்வறிக்கையின்படி, 2019-2024 காலகட்டத்தில் சுமார் 300 கோடி டாலர் மதிப்பிலான சிறிய ரக ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ள துருக்கி, உலக அளவில் அமெரிக்கா மற்றும் இத்தாலிக்கு அடுத்தபடியாக 3-ஆவது பெரிய ஆயுத ஏற்றுமதி நாடாக உருவெடுத்துள்ளது.

iii. மலிவு விலை கைத்துப்பாக்கிகள் மூலம் ஐரோப்பிய சந்தையில் நுழைந்துள்ள துருக்கி நிறுவனங்கள், நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த இத்தாலி, பெல்ஜியம் ஆயுத தயாரிப்பு நிறுவனங்களுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தி வருகின்றன.

**4. மத்திய அரசின் பொதுத் துறை தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல். சிக்னல் கிடைக்காத தொலைதூரப் பகுதிகளிலும் தடையின்றிப் பேசக் கூடிய அதிநவீன செயற்கைக்கோள் தொலைபேசியை (சாட்டிலைட் போன்) அறிமுகப்படுத்தியுள்ளது.**

i. இதன் விலை, வரிகள் உள்பட ரூ.1,34,166-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ராணுவம், கடல்சார் வணிகம், பேரிடர் மீட்புக் குழுவினர், சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் சாகசப் பயணங்களை மேற்கொள்பவர்களை இலக்காகக் கொண்டு இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது .

ii. சாதாரண தொலை பேசி கோபுரங்கள் சிக்னல் வழங்க முடியாத அடர்ந்த காடுகள் மற்றும் ஆழ்கடல் பகுதிகளிலும் இந்த சாட்டிலைட் போன் மூலம் தடையின்றி குரல் அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்ப முடியும்.

**5. புகைப்படங்களை உருவாக்க மெட்டா வெளியிட்டுள்ள புதிய ஏ.ஐ. வசதி, ஏற்கெனவே உள்ள சட்ட வரம்புக்குள் வருகிறதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.**

i. மெட்டா நிறுவனம் மியூஸ் ஏ.ஐ. எனும் புகைப்படங்களை உருவாக்கும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இன்ஸ்டாகிராம் போன்ற பொதுதளத்தில் இருக்கும் பயனர்களின் சொந்தப் புகைப்படங்களை அவர்களுக்குத் தெரியாமல் எடுத்து, எளிதில் திருத்தி பயன்படுத்த முடியும் எனக் கூறப்படுகிறது. டீப் ஃபேக் போன்ற வசதி மூலம் உருவாக்கப்படும் போலிப் புகைப்படங்கள் ஏற்கெனவே பல சர்ச்சைகளை உருவாக்கி

வருகிறது. இந்தச் சூழ்நிலையில் மெட்டா வெளியிட்டுள்ள மியூஸ் ஏ.ஐ. வசதி தனிநபர் பாதுகாப்புக்கு எதிரானதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

6. **இருதரப்பு வர்த்தகத்தில் உள்ள ஆட்சேபங்கள் இந்திய-அமெரிக்க இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தை கட்டமைப்புக்குள் தீர்க்கப்பட வேண்டும். மாறாக, அமெரிக்க வர்த்தக சட்டத்தின் பிரிவு 301- இன் கீழ் கூடுதல் வரிவிதிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு தலைபட்சமானது' என்று அமெரிக்க வர்த்தக பிரதிநிதி (யுஎஸ்டிஆர்) விசாரணையில் இந்தியா தனது வாதத்தை முன்வைத்தது.**

i. அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் யுஎஸ்டிஆர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த விவகாரம் தொடர்பான பொது விசாரணையின்போது, மத்திய வர்த்தக அமைச்சக இணைச் செயலர் பிரிஜ் மோகன் மிஸ்ரா ஆஜராகி இந்தியா சார்பில் வாதத்தை முன்வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:

- விருப்பத்துக்கு மாறாக தொழிலாளர்களைக் கட்டாயம் பணிபுரிய வைத்து தயாரிக்கப்படும் பொருள்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கத் தவறியாதாக இந்தியா மீது கூடுதல் வரியை விதிக்க யுஎஸ்டிஆர் பரிந்துரைத்துள்ளது.
- ஆனால், அமெரிக்காவில் உற்பத்தி செய்யவோ அல்லது பயிரிடவோ முடியாத 1,600 பொருள்களை தொழிலாளர்களை கட்டாயப்படுத்தி தயாரிக்கச் செய்யும் 'கட்டாய உழைப்பு' ஆய்விலிருந்து அமெரிக்கா விலக்கு அளித்துள் ளது ஏன்?.
- இந்த 1,600 பொருள்களுக்கு யுஎஸ்டிஆர் வழங்கியுள்ள விலக்குகள், உலகளாவிய விநியோகச் சங்கிலியில் கட்டாய உழைப்பின் தாக்கத்தைக் கையாள்வது மற்றும் விதிமீறல் நடைமுறைகளால் ஏற்படும் தாக்கத்தைத் தடுப்பது ஆகிய கொள்கை நோக்கங்களைச் சிதைக்கின்றன.
- அதுபோல, அமெரிக்க பருத்தி மற்றும் அது சார்ந்த பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஜவுளிப் பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும்போது குறைவான சுங்க வரி விதிக்கப்படுகிறது. இதுவும் தன்னிச்சையான நடைமுறையாகும். இதுவும் கட்டாய உழைப்பு குறித்த கவலைகளை முழுமையாகத் தீர்க்காமலேயே, வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் கொள்முதல் முடிவுகளைப் பாதிப்பதோடு,

அவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

- எனவே, கட்டாய உழைப்பு சார்ந்த பொருள்கள் ஏற்றுமதி விவகாரத்தில், அமெரிக்க வர்த்தக சட்டத்தின் பிரிவு 301-இன் கீழ் 12.5 சதவீத கூடுதல் வரி விதிப்பது போன்று ஒருதலைபட்சமான முறையில் கையாளக் கூடாது. இதுதொடர்பான ஆட்சேபங்களுக்குத் தீர்வு காண இந்தியா தயாராக உள்ளது.
- மேலும், இந்த விவகாரம் இந்திய- அமெரிக்க இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தை கட்டமைப்புக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா தரப்பில் வாதத்தை முன்வைத்தார்.
- யுஎஸ்டிஆர்-இன் இந்த விசாரணையில், இந்திய தொழில்-வணிக கூட்டமைப்பு (ஃபிக்கி) மற்றும் இந்திய தொழிலக கூட்டமைப்பு (சிஐஐ) உள்ளிட்ட இந்திய தொழில் நிறுவன அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று தங்களின் கருத்துகளை முன்வைத்தனர்.

ii. பின்னணி:

- இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட வர்த்தக கூட்டுறவு நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் அமெரிக்க உற்பத்தியை எந்த அளவுக்குப் பாதித்துள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கில் அமெரிக்க வர்த்தகச் சட்டம் 1974- இன் பிரிவு 301-இன் கீழ் யுஎஸ்டிஆர் மூலம் புதிய விசாரணைக்கு அமெரிக்கா உத்தரவிட்டது. அதன்படி தீவிர ஆய்வு மேற்கொண்ட யுஎஸ்டிஆர் பிரதிநிதி ஜேமிஸன் க்ரீயர், அண்மையில் தனது பரிந்துரையைச் சமர்ப்பித்தார். அதில் இந்தியா உள்பட 54 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சத வீத வரியை விதிக்க பரிந்துரைத்தார்.
- பிற நாடுகளில் தங்கள் விருப்பத்துக்கு மாறாக தொழிலாளர்களைக் கட்டாயம் பணிபுரிய வைத்து தயாரிக்கப்படும் பொருள்கள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கும் விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி, இந்த வரியை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த விதிமுறைகளின் கீழ், இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 54 நாடுகள் மீது இந்த வரியை விதிக்க பரிந்துரைக்கப்பட்டது.

- வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகள் குறித்து விசாரணை மேற்கொண்டு, வரி அல்லது பிற கட்டுப்பாடுகளை விதிக்க அனுமதிக்கும், அமெரிக்காவின் சக்திவாய்ந்த வர்த்தக கருவியாக, வர்த்தக சட்டத்தின் 301-ஆவது பிரிவு உள்ளது. அதன்படி, முதல்கட்டமாக இந்த வரிவிதிப்பு பரிந்துரை தொடர்பான விசாரணையை 54 நாடுகளிடமும் யுஎஸ்டிஆர் மேற்கொண்டு வருகிறது.

**7. திருநெல்வேலியில் ரூ.15,037 கோடி மதிப்பீட்டில் 2,670 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான மின்கல ஆற்றல் சேமிப்பு ஆலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழக அரசு மேற்கொண்டது.**

i. அதற்கான உடன்படிக்கை முதல்வர் ஜோசப் விஜய் முன்னிலையில் தமிழக தொழில் துறை மற்றும் விக்ரம் சோலார் நிறுவனம் இடையே தலைமைச் செயலகத்தில் கையொப்பமானது. இதுதொடர்பாக அரசு வெளி யிட்ட செய்தி:

- தமிழகத்தில் ஒரகடம் மற்றும் வல்லம் ஆகிய இடங்களில் விக்ரம் சோலார் குழுமம் சூரிய ஒளி மின்னழுத்த (சோலார் பி.வி.) தொகுதிக்கான உற்பத்தி ஆலைகளை நிறுவியுள்ளது. மேலும், திருநெல்வேலி கங்கைகொண்டானில் சூரிய ஒளி மின்னழுத்த செல்கள் மற்றும் தொகுப்புகளுக்கான ஒருகிணைந்த உற்பத்தி வளாகத்தையும் அமைத்துள்ளது.
- இந்தச் சூழலில், திருநெல்வேலி சிப்காட் கங்கைகொண்டான் தொழிற்பூங்காவில் ரூ.15,037 கோடி முதலீட்டில் 2,670 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஆலை (பேட்டரி எனர்ஜி ஸ்டோரேஜ் சிஸ்டம் பிஇஎஸ்எஸ்) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் விஜய் முன்னிலையில் கையொப்பமானது.

**8. பாதுகாப்பு மற்றும் அறம் சார்ந்த கவலைகள் அதிகரித்து வருவதால், வாட்ஸ்அப் (WhatsApp) மற்றும் இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற சமூக ஊடகப் பெருநிறுவனங்கள் மீது அரசாங்கத்தின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அவசியமாகியுள்ளன.**

i. உலகளாவிய மற்றும் தேசிய பயன்பாட்டுப் புள்ளிவிவரங்கள்

- உலகளவில் சுமார் 300 கோடி (3 பில்லியன்) மக்கள் வாட்ஸ்அப்பைப் பயன்படுத்துகின்றனர். 80 கோடி (800 மில்லியன்) பயனர்களுடன் இந்தியா உலகிலேயே முதலிடத்தில் உள்ளது; அதைத் தொடர்ந்து பிரேசில் (14 கோடி), இந்தோனேசியா (11 கோடி), அமெரிக்கா (10 கோடி) மற்றும் பிலிப்பைன்ஸ் (8.8 கோடி) ஆகிய நாடுகள் உள்ளன.
- இன்ஸ்டாகிராம் பயன்பாட்டிலும் இந்தியா உலகளவில் முன்னணியில் உள்ளது; இங்கு 55 கோடி (550 மில்லியன்) பயனர்கள் உள்ளனர். அமெரிக்கா (20 கோடி), பிரேசில் (15 கோடி), இந்தோனேசியா (11 கோடி) மற்றும் ஜப்பான் (6.4 கோடி) ஆகியவை குறிப்பிடத்தக்க பயனர் எண்ணிக்கையைக் கொண்ட பிற நாடுகளாகும்.
- இந்தியாவின் இந்த மிகப்பெரிய பயனர் எண்ணிக்கை, இணையச் சந்தையில் அது வகிக்கும் முக்கிய உலகளாவிய மைய நிலையை உணர்த்துகிறது; இதனால், இச்சேவைகளை ஒழுங்குபடுத்துவது ஒரு தேசிய முன்னுரிமையாக மாறியுள்ளது.

ii. கொள்கை மற்றும் ஒழுங்குமுறைச் சூழல்

- ஜூலை 2026-இல், வாட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் தாய் நிறுவனமான 'மெட்டா' (Meta) நிறுவனத்திற்கு, குறிப்பிட்ட தள அம்சங்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் குறித்து விளக்கம் கோரி மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தொடர்ச்சியான அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை அனுப்பியது.
- வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் (Telegram) வழியாக நடைபெறும் இணையவழி முதலீட்டு மோசடிகள் அதிகரிப்பது குறித்து உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்திருந்தது; இதில் சைபர் குற்றவாளிகள் சந்தை நிபுணர்களாக வேடமணிந்து பயனர்களை மோசடிகளில் சிக்க வைக்கின்றனர்.

iii. புதிய அம்சங்கள் தொடர்பான பாதுகாப்பு கவலைகள்

- பயனரின் தொலைபேசி எண்ணை வெளிப்படுத்தாமலே தொடர்புகொள்ள அனுமதிக்கும் "பயனர் பெயர்" (username) வசதியை அறிமுகப்படுத்த வாட்ஸ்அப் திட்டமிட்டுள்ளது. போலி கணக்குகளை உருவாக்கவும் சைபர் குற்றங்களை எளிதாக்கவும் இந்த அம்சம் வழிவகுக்கும் என்று அஞ்சும் இந்திய அரசு, இது குறித்து முழுமையான

விளக்கத்தைக் கோரியுள்ளது.

- பாதுகாப்பு நடவடிக்கைகள் இருப்பதாக வாட்ஸ்அப் கூறினாலும், தொலைபேசி எண்ணைப் பகிர வேண்டிய கட்டாயத்தை நீக்குவது தளத்தை மிகவும் ஆபத்தானதாகவும், கண்காணிப்பதற்கு கடினமானதாகவும் மாற்றும் என்று வாதிட்டு அரசு இதில் சந்தேகம் கொண்டுள்ளது.

iv. அறம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த எச்சரிக்கைகள்

- சிறார்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தை ஊக்குவிப்பதாகக் கூறப்படும் விளம்பரங்கள் இன்ஸ்டாகிராமில் தோன்றியதே, சமீபத்திய அரசு அறிவிப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.
- ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றின் விசாரணையில், மெட்டாவின் அல்காரிதம்கள் (algorithms) தெரியாமலேயே ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய இரண்டிலும் குழந்தைகளைத் துன்புறுத்தும் வீடியோக்களை ஊக்குவித்தது தெரியவந்தது.

v. பொருளாதாரம் மற்றும் தரவுத் தனியுரிமை சார்ந்த உண்மைகள்

- வணிக நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் தரவுகளை (தொலைபேசி எண்கள் உட்பட) மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கான ஒரு சரக்காகக் கருதும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். "டிஜிட்டல் கைது" (Digital Arrest) போன்ற வளர்ந்து வரும் இணையவழி அச்சுறுத்தல்கள்; இதில் குற்றவாளிகள் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி, விவரம் அறியாத குடிமக்களிடமிருந்து பணத்தைப் பறிக்கின்றனர்.

இத்தகைய தளங்களுக்கு இந்தியா மிகப்பெரிய சந்தையாகத் திகழ்வதைக் கருத்தில் கொண்டு, இந்தத் தொழில்நுட்பங்கள் சட்டவிரோதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அவற்றின் மீது ஒரு "கட்டுப்பாட்டை" (ஒழுங்குமுறை நடவடிக்கை) விதிப்பது அவசியமாகும்.